

**இராமகுமாரன்** – தமிழை நேசிப்பவர். தமிழை சுவாசிப்பவர். அன்றைய இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த “சிறு மதுரை” என்றும் “சிவல்புரி” என்றும் அன்போடு அழைக்கப்படும் சிற்றூரான “கீழச்சிவல்பட்டி”யில் பிறந்தவர்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் அமைந்த இந்த “கீழச்சிவல்பட்டி”க்கு அருகில்தான் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலகப் புகழ் பெற்ற, புறநானூற்றுப் பாடலை இயற்றிய “கணியன் பூங்குன்றனார்” பிறந்த “மகிபாலன்பட்டி” உள்ளது. நம் கவியரசர் பிறந்த “சிறுகூடல்பட்டி” உள்ளது ! ஏன் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பன் கடைசியாக வாழ்ந்து மறைந்த (கி.பி. 1250இல்) “நாட்டரசன்கோட்டை”யும் உள்ளது.

தமிழ் விளைந்த இந்த மண்ணாலேயே இவருக்குத் “தமிழ்” இரத்தத்தில் ஊறியுள்ளது !

இராமகுமாரன் – மதுரையில் தியாகராசர் பொறியியல் கல்லூரியில் படித்து பின் காப்பீட்டு மேலாண்மையில் முதுகலை பயின்றவர். சென்னையில் பொதுக் காப்பீட்டுத் துறையில் பணிபுரிந்து 30 ஆண்டுகளில் 3 இலட்சம் தமிழர்களுக்கு மேல் மனித குலத்தின் மகத்தான மருத்துவக் காப்பீட்டின் மகத்துவத்தை – அவசியத்தை – அதன் பயனை காப்பீட்டு ஆவணங்களாக – அறிவுரைகளாக வழங்கி உள்ளார். காப்பீட்டுத் துறையில் ஆராய்ச்சி செய்து உலகத்தில் ‘‘காப்பீட்டுத் தத்துவமே’’ கி.பி. 957இல் சோழ அரசனால் கொணரப்பட்டதுதான் என்று ஆராய்ந்து “முனைவர்” பட்டம் பெற்றவர்.

இராமகுமாரன் – தன் வாழ்நாள் குறிக்கோளாக உலகத் தமிழர்களுக்காக தமிழனின் “வாழ்வியல்” நூலான “உலகப் பொதுமறை” யான திருக்குறளை எளிமையான – இலகுவான புதுக்கவிதைத் தொகுப்பாகவும், உலகத்தில் பரந்து விரிந்து வாழும் தமிழர்கள் சிரமப்படாமல், நினைக்கும் போதெல்லாம், தேவைப்படும் போதெல்லாம், தங்களுக்கு அன்றாடம் ஏற்படும் வாழ்வியல் பிரச்சினைகளைப் பற்றி 2000 வருடங்களுக்கு முன்பே பல தீர்வுகளைச் சொன்ன வித்தகன் வள்ளுவனை கலந்தாலோசிக்க கைபேசியிலேயே “வியத்தகு வள்ளுவனின் – விலையில்லா செயலி”யாகவும் “இணையற்ற இணையதளமாகவும்” வடிவமைத்துத் தமிழுலகத்திற்கு கம்பன் பதிப்பகம் மூலம் தந்துள்ளார்.

காரைக்குடியில் வாழும் தமிழர்கள் முதல் கலிஃபோர்னியாவில் வாழும் தமிழர்கள் வரை உலகில் எந்த மூலையில் வாழும் தமிழனுக்கும் இந்த “இணையதளம்” – “இதய தளமாக” விளங்கி, தொல்காப்பியரின் யாப்பிலக்கணப்படி “அடி மோனையில்” அழகுற – மனதில் “நச் ”சென்று பதிந்து, இனிமையாக – எளிமையாக நாம் மன்றத்தில் உரையாட புதுக்கவிதைப் பாணியில் இங்கே தந்துள்ளார்!

இராமகுமாரன் – இப்புதுக்கவிதைத் தொகுப்பின் நோக்கத்தையும், குறளை எப்படி, யார் யார், எந்தச் சூழ்நிலையில், எப்பிரச்சனைக்கும் தீர்வாக எப்போதும் புரிகிற இனிய தமிழ் புதுக்கவிதையில் ஒவ்வொருக் குறட்பாவையும்அலசி ஆராய்ந்துப் பயன்படுத்த வேண்டிய காரணத்தையும் தன் “ஆசிரியர் உரை”யில் விளக்கமாகத் தந்துள்ளார் !

இனிமேல் இந்தப் “புதுக்கவிதையில் திருக்குறள்” புத்தகம் முழுவதுமாக பதிவேற்றம் செய்யப்பட்ட எங்கள் இணையதளங்கள் உலகத் தமிழர்களின் உள்ளம் கவர்ந்த “இதய தளமாக” விளங்கும் என்பதில் ஐயமில்லை.

வாருங்கள் ! வள்ளுவனை எப்போது வேண்டுமானாலும் எளிய முறையில் இலகுவாக – இனிமையாக சந்தியுங்கள் !!

கம்பன் பதிப்பகம்
www. kambanpathippagam.com
www.kuraleasy.com